பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 09 | வெள்ளிக்கிழமை | 23.01.2026 | அதிர்வு 176

## சுகிர்தராஜனின் நினைவேந்தல்!



சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

03




# தமிழரசுடன் இணைந்து பயணிக்க நாம் தயார்!

## ஆனால் கொள்கை அவசியம்; மணிவண்ணன் வலியுறுத்து

(எஸ். நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிக்கவும், எதிர்வரும் தேர்தல்களில் சேர்ந்து போட்டியிடவும் எந்தத் தடையும் இல்லை. எனினும், தமிழரசுக் கட்சி வெறுமனே தேர்தலை மையமாகக் கொண்டு இயங்காமல், ஒரு கொள்கையை முன் வைத்து அணிதிரட்டலை மேற்கொள்ள வேண்டும்."

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் வலியுறுத்தினார்.

06



### அடுத்த 15 ஆண்டுகளுக்கு

# அநுர அரசாங்கத்தை அசைக்கவே முடியாது!

## அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசை அடுத்த 15 வருடங்களுக்கு அசைக்க முடியாது." – என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற

06




இலங்கைத் தமிழரசு கட்சியின் அரசியல் குழு நேற்று திருகோணமலையில் 'மரதன்' கூட்டம் ஒன்றை நடத்தி இருக்கிறது. மாலை 4.30 மணிக்கு தொடங்கிய கூட்டம் 8.30 மணி வரை நீடித்தது.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து விலகுமாறு இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனுக்கு பணிப்புரை வழங்கி அரசியல் குழு கடந்த வவுனியாக் கூட்டத்தில் தீர்மானித்த நிலையில், அதன் தொடர்ச்சியாக நேற்றைய கூட்டம் இடம்பெற்றது.

அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் பதவியில் இருந்து சிறிதரனை விலகச் சொல்லும் வற்புறுத்தல் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பான்மையான உறுப்பினர்களால் சிறிதரனுக்கு கொடுக்கப்பட்டது.

கூட்டத்துக்கு தலைமை வகித்த சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியலிங்கம், சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற

06



# அநுரவின் ஆட்சி தோல்வியில்! இது எதிரணிகள் எழும் நேரம்!!

## முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன பகிரங்கம்

“அநுரவின் ஆட்சியின் கீழ் மக்களின் எதிர்பார்ப்பு தவிடுபொடியாகி வருகின்றது. எனவே, எதிரணிகள் வலுவாகச் செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரமேஷ் பத்திரன மொட்டுக் கட்சி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கவில்லை.

சிலிண்டர் கூட்டணியில் களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவே அவர் செயற்பட்டார்.

இந்நிலையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் மீண்டும் இணைந்துள்ளார்.

அவருக்கு காலி, எல்பிட்டிய தொகுதி அமைப்பாளர் பதவியை கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ வழங்கி வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ரமேஷ் பத்திரன,

“நான் மீண்டும் அரசியல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளேன். தாய்வீட்டுக்கு மீண்டும் வந்துவிட்டேன். இனி வலுவான முறையில் அரசியல் பயணம் தொடரும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு அதிக வாங்கு வங்கி உள்ள மாவட்டம்தான் காலி மாவட்டம். அங்கு சிறப்பான முறையில் பயணம் தொடரும்.

இந்த ஆட்சியின் கீழ் மக்களின் எதிர்பார்ப்பு தவிடுபொடியாகி வருகின்றது. எனவே, எதிரணிகள் வலுவாகச் செயற்பட வேண்டும்.” – என்றார்.

# மருத்துவ, பதிவுச் சான்றிதழ்கள் இன்றி உணவு தயாரித்து விற்றவருக்கு சிறை



மருத்துவ மற்றும் பதிவுச் சான்றிதழ்கள் இன்றி உணவு தயாரித்து பொதி செய்து விற்பனையில் ஈடுபட்டதுடன், உணவு தயாரிப்பின் போது வெளியேறும் கழிவு நீரினை மழை நீர் வடிந்தோடும் பொது வாய்க்காலில் வெளியேற்றியமைக்காக வல்வெட்டித்துறையை சேர்ந்த ஒருவருக்கு 88 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்தும், 2 மாத சிறைத்தண்டனை விதித்தும் பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நகராட்சி மன்றத்தின் பொதுசுகாதார பரிசோதகரான ப.தினேஷ்க்கு முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பாக பார்வையிட்டு உறுதிப்படுத்திய நகராட்சி மன்றத்தின் பொதுச்சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் அவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்று 80,000 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன், ஐந்து வருடங்கள் ஒத்தி வைக்கப்பட்ட 2 மாத காலம் சிறைத்தண்டனையும் விதித்தது.

# சுகிர்தராஜனின் நினைவேந்தல்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வு திருகோணமலையில் நேற்று நடைபெற்றது.

சுகிர்தராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட திருகோணமலை கிழக்கு ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட ஊடக வியலாளர் சங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்பு இணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சுகிர்தராஜனின் திருவுருவப் படத்துக்கு மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக மலரஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டது.

தற்போதைய அரசு ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு நீதியை நிலை நாட்ட வேண்டும், உள்ளகப் பொறிமுறை அல்லது சர்வதேப் பொறிமுறை ஊடாகவோ நீதியை வழங்க வேண்டும் என்று இதன்போது இங்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.












# போதை பொருள்களுக்கு அடிமையானோருக்காக செபஸ்தியார் திருநாளில் நேற்று சிறப்பு மன்றாட்டு

**(மரியசீலந் திலைக்ஸ்)**

செபஸ்தியார் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக் காடு கப்பலேந்தி மாத ஆலயத்தில் நேற்று நற்கருணை பெரு விழா முன் னெடுக்கப்பட்டது.

கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் தலைமையில் நேற்று மாலை 5.00 மணியளவில் திருச்செபமாலை யுடன் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது

நற்கருணை ஆராதனையை யாழ் மறைமாவட்ட குடும்ப நல மைய (அகவொளி) இயக்குநர் அருட்தந்தை டேவிட் ஒப்புக் கொடுத்தார்.

அருட்தந்தையவர்கள் "போதைகளற்ற பங்குகளை உருவாக்குவோம்" எனும்

தொனிப்பொருளில் இந்த வழிபாட்டை நெறிப்படுத்தி போதைக்கு அடிமையான வர்கள் விடுபடவும், போதைக்கு அடிமை யாகி கைது செய்யப்பட்டு தண்டனை களுக்காக சிறைச்சாலைகளில் இருப்ப வர்கள் மனம் திரும்பி மீண்டும் சமூகத் துடன் இணைத்துக் கொள்ளப்படவும், எமது நாட்டை வெகுவாக கொண்ட இந்த போதைப் பொருள் முழுதாக இலங்கை தீவில் இருந்து அகன்று போகவும் அவர் தன்னுடைய ஆராதனையில் சிறப்பாக செபித்து நின்றார்.

நற்கருணை பெருவிழாவில் கட்டைக் காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார், அருட்தந்தை டேவிட், அருட்சகோதரன், பங்கு மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழா வருட மாநாடு லண்டனில்!

## அது குறித்து யாழ்ப்பாணத்தில் விளக்கம்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு பதினான்காவது தமிழ் மாநாடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் பிரித்தானியாவில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள உலகத் தமிழர் வரலாற்று வளாகத்தில் ஓகஸ்ட் மாதம் 29,30 ஆம் திகதிகளில் இது நடத்தப்படவுள்ளது. யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்களின் ஒற்றுமைக்காகவும் ஐக்கியத்துக்காகவும் சட்டத்தரணி அடைக்கலமுத்து இளஞ்செழியன் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமும் இலங்கை அரசாங்கத்திற்கு முன்வைக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

197. ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் பல்வேறு நாடுகளில் இயங்கி வருகிறது. 13 ஆவது மாநாடு 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம், தேசிய ஒருங்கிணைப்பாளர் லண்டன் விழா ஏற்பாட்டாளர் சட்டத்தரணி அடைக்கலமுத்து இளஞ்செழியன் உள்ளிட்ட இந்த அமைப்பின் சர்வதேசக் கிளைகளின் பிரமுகர்கள், இலங்கை கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தன் மற்றும் தேசிய அமைப்பாளர் தே.செந்தில்வேலவர் உள்ளிட்டோர் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினரும் முன்னாள் பொதுச் செயலாளருமான துரைராஜசிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன் ஆகியோர் அரசியல் குழுவின் தீர்மானப்படி சிறிதரன் அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியை விட்டு விலக வேண்டும் என்று தீவிரமாக வலியுறுத்தினர்.

கூட்டத்தில் பங்கு பற்றிய திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசன் மட்டும் வாயே திறக்காமல், நாலு மணி நேரக் கூட்டத்தில் நான்கு தடவைகள் ஆழ்ந்த தூக்கத்துக்குச் சென்று திரும்பினார் என்று தெரிகிறது. அவர் இந்தப் பக்கமும் முடிவெடுக்கவில்லை. அந்தப் பக்கமும் முடிவெடுக்கவில்லை. இந்தப் பக்கத்திற்கு ஆதரித்துப் பேசவுமில்லை. அந்தப் பக்கத்து ஆதரித்து பேசவும் இல்லை. மௌனத்தோடு தூக்கமாக நேரத்தைக் கடத்தி முடித்தார்.

சிறிதரன் மட்டும் தன்னுடைய நிலைப்பாட்டில் மிக உறுதியாகவும் திடமாகவும் நின்றார். "அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவி குறித்து முடிவெடுப்பது நான். அது என்னுடைய சுயாதீன தீர்மானத்திற்குரியது. நான் பதவி விலக மாட்டேன்!" என்று அறுதியிட்டுக் கூறியவர், தான் எந்தத் தவறும் இழைக்கவேயில்லை என்றும் வாதிட்டார்.

ஒரு கட்டத்தில் விவாதத்தில் பேசிய சாணக்கியன், இந்த அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவியைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தமக்குத் தந்து விடுமாறு கோடீஸ்வரன் எம்.பி. கோருகின்றார், அவரேதான் சரியான தெரிவாக இருப்பார் எனத் தோன்றுகின்றது என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட சிறிதரன் எம்.பி. சாணக்கியனைப் பார்த்து "சின்னப்பிள்ளைத்தனமாகப் பேச வேண்டாம்." – என்றார்.

இடையில் புகுந்த சத்தியலிங்கம் எம்.பி. "இல்லை... இல்லை.. சாணக்கியன் கூறுவது உண்மைதான். நானும் இருக்கும் போதுதான் கோடீஸ்வரன் அப்படி ஒரு யோசனையை எங்கள் முன்னால் முன் வைத்தார்." – என்றார்.

ஆக, தமிழரசுக் கட்சிக்குள் இந்த அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினர் பதவி பெரும்களேபரத்தைஉருவாக்கிஇருக்கின்றது என்பது மட்டும் நிச்சயம்.

கூட்டத்தின் முடிவில் பத்திரிகையாளர்களைச் சந்திக்காமலேயே கட்சித் தரப்புகள் வெளியேறின.

என்ன முடிவு எடுத்தீர்கள் என்று நேற்று இரவு சுமந்திரனைத் தொடர்பு கொண்டு கேட்டேன்.

"சிறிதரன்அரசியல்குழுவின்பணிப்பை ஏற்க மறுத்து விட்டார். எனவே அதனையொட்டி, தீர்க்கமான – தீர்மானகரமான – முடிவை எடுத்து இருக்கிறோம். அது பற்றி உரிய வேளையில் அறிவிப்போம். முடிவு ஒன்று எடுத்து விட்டோம் என்பதை மட்டும்தான் இப்போது உங்களுக்கு தெரிவிக்க முடியும்." – என்றார்.

கூட்டத்தில் பங்கு பற்றிய சிறிதரன் கட்சியின் அரசியல் குழுவுக்கு அதிகாரம் எதுவும் இல்லை என்றும் அத்தகைய குழு தன்னை அரசமைப்பு கவுன்ஸிலில் உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேறுமாறு பணிக்கும் அதிகாரமும் கொண்டது அல்ல என்றும் கடுமையாக வாதிட்டார்.

கூட்டத்தில் பங்கு பற்றிய இன்னொரு உறுப்பினர் சிறிதரன் அவ்வாறு வாதிட்டார் என்பதை உறுதிப்படுத்தினார். அந்த வாதத்தின் அடிப்படையிலேயே அவருக்கு பதிலடி நடவடிக்கையை – தீர்மானத்தை – அரசியல் குழு எடுத்து அதை நடைமுறைப்படுத்தும் என்று கோடி காட்டினார் அந்த உறுப்பினர்.

அரசியல் குழு எடுத்திருக்கின்ற 'தீர்க்கமான, தீர்மானகரமான முடிவு' யாது என்பதை நேற்று நள்ளிரவு வரை திட்டவட்டமாக கட்சியின் பொதுச் செயலாளரோ, தலைவரோ அல்லது ஏனைய அரசியல் குழு உறுப்பினர்களோ உறுதிப்படுத்தவும் இல்லை. தெளிவுபடுத்தவும் இல்லை. ஆனால் அதை அவர்கள் மறைத்து வைக்க முடியாது. விரைந்து, எப்படியேனும் அதைப் பெற்று, வாசகர்களுக்கு அதன் விவரத்தைத் தருவேன்.

ஒன்று மட்டும் நிச்சயம். அரசியல் குழுவின் முடிவு, தமிழரசுக் கட்சிக்குள் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தித்தான் அமைதிக்கு வரும் என்று தோன்றுகின்றது.

* * *

ஒரு காலத்தில் ரெலோவின் வடக்கு மாகாணத் தரப்பில் மிக முக்கிய பிரமுகராக இருந்தவர் விந்தன் கனகரத்தினம். ரெலோவுக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர். வடக்கு மாகாண சபையிலும் ரெலோவின் பிரதிநிதியாக அங்கம் வகித்தவர்.

பிற்காலத்தில் கட்சிக்கும் அவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு கட்சித் தலைவர் செல்வத்தையும் பிறரையும் அவர் தாறுமாறாக விமர்சிக்க போய் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார். பின்னர் தாம் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து விட்டார் என அவர் அறிவித்த போதிலும், தமிழரசு கட்சியில் சுறுசுறுப்பான உறுப்பினராக அவரைக் காணவே முடியவில்லை.

கடந்த பொதுத் தேர்தல் சமயம் யாழ் மாவட்டத்தில் ரெலோ சார்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்ட ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமியை பகிரங்கமாக அவர் மிக மோசமான முறையில் விமர்சிக்க போக, அவருக்கு எதிராக யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் 5 கோடி ரூபா மான நஷ்டம் கோரி சுரேந்திரன் வழக்கு தாக்கல் செய்தார்.

வழக்கின் ஆரம்பத்தில் நீதிமன்ற அழைப்பாணை தமக்குக் கிடைக்கவில்லை என்று விந்தன் கனகரத்தினம் கூறிவந்த போதிலும், ஏதோ ஒரு வகையில் அவருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டு ,கடந்த 19ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் அவருக்கு எதிரான வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தமது சட்டத்தரணியுடன் அவர் முன்னிலையாகியிருக்கின்றார்.

தங்கள் தரப்புப் பதிலை தாக்கல் செய்வதற்கு விந்தன் கனகரத்தினம் தரப்பினர் கால அவகாசம் கோரியமையினால் மார்ச் 9ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழக்காளியும் எதிராளியும் வழக்கில் நேரடியாக தோற்றும் நிலைமை வந்து விட்டமையால், வழக்கு இனி தீர்க்கமான ஒரு நிலையை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கலாம்.

## அநுர அரசாங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தி அரசில் ஊழல், மோசடிக்கு இடமில்லை. நாம் மக்கள் மத்தியில் உண்மையைக் கூறி செயற்பட்டு வருகின்றோம். எனவே, எமது ஆட்சி தொடர்வதற்கு மக்கள் ஆணை வழங்குவார்கள்.

நவீன உலகை வெல்ல வேண்டுமெனில் கல்வி மறுசீரமைப்பு அவசியம். அதனைச் செய்வதற்கே அரசு முயற்சிக்கின்றது.

எனினும், கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையில் இடம்பெற்றுள்ள ஒரு பிழையை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த மறுசீரமைப்பையும்குழப்புவதற்குஎதிரணியினர் முற்படுகின்றனர்.

இது எமது நாட்டு பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிப்பதற்கு எதிரணியினர் முயற்சிக்கின்றனர்." – என்றார்.

- - - - - - - - - - - - - - -

## தமிழரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முரசின் "INSIDE" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்கள் கூட்டணிக்கு நல்லூர் பிரதேச சபையில் ஆட்சியமைக்க வேண்டிய தேவை இருந்தது. அதனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் அங்கு ஆட்சியமைத்தோம். அதேபோன்று, வேறு உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு நாங்கள் ஆதரவு வழங்கியுள்ளோம். இதை மறுக்க முடியாது.

அதேநேரம், எதிர்வரும் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஒற்றுமையாக இணைந்து போட்டியிடுவதற்கும் எவ்வித தடையும் இல்லை. அவர்களுடன் இணைந்து பயணிப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால், தமிழரசுக் கட்சி தேர்தல் அரசியலுக்குள் மட்டுமே சிக்கிக் கொள்ளாமல், ஒரு கொள்கையையும் ஒழுக்க நெறிகளையும் முன்னிலைப் படுத்திஒரு வலுவான அணிதிரட்டலை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்பட்டால், நாங்கள் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து பயணிப்பதில் எந்தத் தடையும் இருக்காது." – என்றார்.

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், முரசின் "INSIDE" நிகழ்ச்சியில் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளராகக் கலந்து கொண்டு, அவரிடம் கேட்கப்பட்ட முக்கிய வினாக்களுக்கு வழங்கிய தெளிவான பதில்களை முழுமையாகக் காணொளியில் பார்வையிடலாம்.**





# மன்னார் சௌத்பார் பகுதியில் அனுமதியற்ற கட்டுமானப் பணி நேற்றுத் தடுத்து நிறுத்தம்

## நகரசபைத் தலைவர் தலையிட்டு நடவடிக்கை

மன்னார் சௌத்பார் கடல் பகுதியில் நேற்று சனிக்கிழமை மதியம் சட்ட விரோதமாக இடம் பெற்ற கட்டுமானப் பணி மீனவர்களின் எதிர்ப்புக் காரணமாக நகரசபை தலைவரின் தலையீட்டுடன் நிறுத்தப்பட்டு கட்டுமானப் பணியை மேற்கொண்ட குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

மன்னார் சவுத் பார் கடல் பகுதியில் மீனவர்கள் கரைவலை தொழில் ஈடுபடும் பகுதியில் நேற்றைய தினம் சட்டவிரோதக் கட்டுமான பணி ஒன்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் பனங்கட்டு கொட்டு மீனவ சங்க தலைவர், பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் இணைந்து அந்தக் கட்டுமானப் பணி தொடர்பாக சம்பந்தப்பட்ட குழுவிடம் கேள்வி எழுப்பினர்.

இது ஒரு தனியார் காணி எனவும் அதில் கடல் நீர் பரிசோதனை நடவடிக்கை ஒன்றுக்காக கட்டுமானப் பணி இடம் பெறுவதாக அந்தக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் கட்டுமானப் பணியை உடனடியாக நிறுத்த கோரி மீனவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அவ்வேளையில் அந்த இடத்திற்கு வருகை தந்த மன்னார் நகரசபைத் தவிசாளர் அந்தக் கட்டுமான பணியை பார்வையிட்டார். குழுவினரின் ஆவணங்களைப் பரிசீலித்தார். நகரசபையிடம் எந்த ஓர் அனுமதியும் பெறப்படாமல் கட்டுமான பணி இடம் பெறுவதை அவதானித்த அவர் அதனால் கட்டுமானப் பணியை உடனடியாக நிறுத்தி சம்பந்தப்பட்ட இடத்தில் இருந்து வெளியேறப் பணித்தார்.

அதே நேரம் உரிய ஆவணங்களுடன் நாளை திங்கட்கிழமை நகரசபைக்கு வருகை தந்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், அதுவரை எந்த ஒரு கட்டுமானப் பணியையும் மேற்கொள்ள வேண்டாம் எனத் தெரிவித்தார்.

அதே நேரம் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் கனிய மணல் அகழ்வு தொடர்பான ஒரு பிரச்சினை நிலவி வருவதால் எந்த ஓர் அனுமதியும் இல்லாமல் மக்களை குழப்பும் விதமாக இவ்வாறான செயற்பாடுகளில் எவரும் ஈடுபட வேண்டம் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மந்திரத்தில் மாங்காய்

வெறும் கையால் முழம் போடுக்கின்ற கணக்குக் காட்டுகின்றார் - மன்னிக்கவும், கணக்கு விடுகின்றார் - நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார. மந்திரத்தில் மாங்காய் விழுத்துவது குறித்து அவர் பேசுகின்றார் என்றே தோன்றுகின்றது.

காணாமல் போனவர்கள் தொடர்பாக 11,000 முறைப்பாடுகள் வரை இருக்கின்றன எனவும், அவை தொடர்பான விசாரணைகள் இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்கப்படும் என்றும் அவர் கூறுகின்ற விடயம் அத்தகைய எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றது.

வடக்கு மற்றும் தெற்கில் காணாமல் போனவர்கள் குறித்து தாங்கள் விசாரிப்பார்கள் என்று கூறியுள்ள அமைச்சர், ஐயாயிரம் முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் இந்த ஆண்டு நிறைவடையும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

தாம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தால் ஓராண்டுக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம் என்று தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தி கொடுத்த வாக்குறுதி வகையறாவை சேர்ந்ததுதான் காணாமல் போனோர் தொடர்பாக நீதி, நேர்மையான விசாரணையை விரைந்து நடத்தி முடிப்போம் என்று அவர் இப்போது அளிக்கும் உறுதிமொழியும் என்பது தெளிவானது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் - குறிப்பாக வடக்கு, கிழக்கில் இருந்து செய்யப்பட்ட முறைப்பாடுகளில் - பெரும்பாலானவை அரச படைகளுக்கு எதிரானவை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அரசு படைகளுக்கு எதிராக விசாரணை நடத்தவே மாட்டோம் என்ற பௌத்த-சிங்களமேலாதிக்க வெறித்தனத்தின் உச்சத்தில் இருக்கின்ற தரப்புகளில் ஒன்று தேசிய மக்கள் சக்தி என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

தென்னிலங்கையில் அதிகார பீடத்துக்கு வந்த, இனி வரக்கூடிய எந்த பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்க தரப்புக்கும் யுத்த காலத்தில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதி, நியாயமான - சர்வதேச நியமங்களுக்கு அமைவான - விசாரணைகளை நடத்தி, தமிழர்களுக்கு நீதி செய்யும் எண்ணம் - உறுதிப்பாடு - கிஞ்சித்தும் கிடையாது என்பது தெளிவானது. அதிலும் தேசிய மக்கள் சக்திக்கு அந்த எண்ணம் அடியோடு கிடையாது.

தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்ட விடயத்தில் பிரதான சூத்திரதாரிகளை-குற்றவாளிகளை - நீதியின் முன் நிறுத்தி, உண்மைகளை வெளிப்படுத்தி, பொறுப்புகூறலை நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்ற விடயத்தில் மிகத் தீவிரமாக இருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தரப்பில் அதன் அமைச்சர் ஒருவர் காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை விசாரித்து முடிப்போம் என்று கதை அளப்பது மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வேலையன்றி வேறில்லை.



# கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிராக வெள்ளியன்று கவனவீர்ப்புப் போர்

## வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேசத்தில்

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தக் கோருவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நேற்று வவுனியாவில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வவுனியா குருமன்காட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது.

கூட்டம் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் தேசிய கட்சிகளின் சார்பில் ஊடக அறிக்கையொன்றினை அனுப்பி வைத்துள்ளார். அதில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

வவுனியா மாவட்டத்தில் உள்ள வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 2011 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவிருந்த "கிவுல் ஓயா" நீர்ப்பாசனத் திட்டத்தை எந்தவிதமான மீளாய்வுமின்றி தற்போதைய அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளமையானது தமிழ் மக்களின் – அதிலும் குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் – இருப்பைக் கேள்விக்குறியாக்குவதாக உள்ளது.



இந்தத் திட்டத்தை நிறுத்தக் கோருவது தொடர்பான கூட்டம் இன்று (நேற்று) வவுனியாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர். இத்திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கிவுல் ஓயா திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ஆபத்துக்களை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையாக எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிர தேசத்தில் கவனவீர்ப்புப் போராட்ட மொன்றை முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை இத்திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்வை காண்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என்பதையும் அரசாங்கத்திற்கு தெரிவிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. – என்று உள்ளது.





# மாநகர பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதியை யாழ். சின்னக்கடையில் முதல்வர் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் 4.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் சின்னக் கடை பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டு மாநகர முதல்வர் வி.மதிவதனி அவர்களினால் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக பொது மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

மிகவும் பழமை வாய்ந்த சின்னக்கடை பொதுச் சந்தை மாநகரசபையினால் நீண்ட காலத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு புதுப் பொழிவுடன் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளமையை அப்பகுதி வாழ் மக்கள் வரவேற்றமையுடன், முதல்வருக்கு நன்றிகளையும் தெரிவித்தனர்.

மேற்படி சந்தை திறப்பு விழாவில் மாநகர பிரதி முதல்வர், உறுப்பினர்கள், ஆணையாளர், பிரதம பொறியியலாளர், பிரதம கணக்காளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள், சந்தை மேற்பார்வையாளர்கள், சந்தை கட்டுமான ஒப்பந்ததாரர், சந்தையின் 2026 ஆம் ஆண்டுக்கான குத்தகைதாரர், குருநகர் பொது அமைப்புக்கள், சந்தை தொழிலாளர்கள், மாநகர ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரைகள் அமைப்பது எதற்கு?

## ஜனாதிபதியின் கருத்துக்கு சாணக்கியன் ஆதரவு

பௌத்தர்கள் இல்லாத இடத்தில் விகாரைகளை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தற்போது தற்றுணிபுடன் கூறிய கருத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பல்கலைக்கழக திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் உரையை எதிர்க்கட்சியினர் திரிவுபடுத்தியுள்ளனர் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கு சென்று குறிப்பிட்ட விடயத்துக்கு அவருக்கு நன்றித் தெரிவித்துக் கொள்கிறேன். ஜனாதிபதி அங்கு குறிப்பிட்ட விடயத்தை எதிர்க்கட்சியினர் திரிவு படுத்தியுள்ளார்கள்.

தவறான நிலைப்பாட்டை சமூக மயப்படுத்த முயற்சிக்கிறார்கள். நாக விகாரைக்கோ அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய விகாரைக்கோ செல்ல வேண்டாம் என ஜனாதிபதி குறிப்பிடவில்லை.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் வடக்கில் ஒரு விகாரையை பிடித்துக்கொண்டு செய்தவற்றை அனைவரும் அறிவோம். இதற்கு நாங்கள் ஆரம்பத்தில் இருந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம். அந்த குழுவினர் பற்றியே ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதை தவிர்த்து சிங்கள மக்கள் வைராக்கியத்துடன் நாக விகாரையை வழிபட செல்கிறார் என ஜனாதிபதி குறிப்பிடவில்லை.

ஜனாதிபதி தற்றுணிபுடன் தான் அவ்வாறு குறிப்பிட்டார். ஒரு பௌத்தர் கூட வாழாத இடத்தில் விகாரையை கட்டி அந்த விகாரைக்கு பஸ்ஸில் ஆள்களை அழைத்துச் சென்று, அங்கு போராட்டத்தில் ஈடுபட்டு, நாட்டுக்கு தீ வைக்க முயற்சித்த போது கடந்த கால ஆட்சியாளர்கள் வாயை மூடிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஜனாதிபதி தற்றுணிவுடன் அதற்கு எதிராக பேசினார்.அதற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கதிர்காமத்துக்கு தமிழர்கள் செல்வது பற்றியும் தற்போது குறிப்பிடப்படுகிறது.

இந்த நாட்டுக்கு பௌத்த மதம் வருவதற்கு முன்னரே கதிர்காம கந்தனை மக்கள் வழிபட்டார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். – எனத் தெரிவித்துள்ளார்.




# ஏறாவூர் விபத்தில் இருவர் சாவு

மட்டக்களப்பு – ஏறாவூரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். வெள்ளியிரவு சுமார் 8 மணியளவில், ஏறாவூர் சவுக்கடி கடற்கரை வீதி, புற்றுநோய் வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள், எதிரே வந்த கப் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கியவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றையவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும், விபத்தில் காயமடைந்த இன்னொரு நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிக் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும் ஏறாவூர் வாளியப்பா ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகில் வசித்து வந்த – ஏறாவூர் 01 மற்றும் குடியரசு பகுதிகளைச் சேர்ந்த 17 மற்றும் 21 வயதுடைய – இளைஞர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி எம்எஸ். நஸீர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு ஆரம்பக்கட்ட விசாரணைகளை மேற்கொண்டார்.

கப் ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். ஏறாவூர்ப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஜே.வி.பி. எனும் பைட் பைபர்

பைட் பைபர் ஒவ் ஹேமலின் (Pied Piper of Hamelin) என்பது ஜெர்மனியின் ஹேமலின் நகரைச் சேர்ந்த எலிகளைப் பிடிப்பவர் பற்றிய புகழ்பெற்ற இடைக்காலக் கதையாகும். அவர் மந்திரக் குழல் மூலம் எலிகளையும், பின்னர் குழந்தைகளையும் கவர்ந்து சென்றார். ஊதியம் தராத நகர மக்கள் மீது கோபமடைந்து, அவர் குழந்தைகளை கடத்திச் சென்றார் எனக் கூறப்படும் இந்த கதை, ஏமாற்றுதல் அல்லது கவர்ச்சியான வாக்குறுதிகளால் மக்களைத் தன் வசம் ஈர்ப்பதைக் குறிக்கும் ஓர் உருவக மாகப் பயன்படுத்தப்படுகிறது.



- ஜூட் பிரகாஷ் -
(மெல்பேர்ண்)

தமிழ் தேசிய அரசியலை மட்டுமல்ல, தமிழர் என்ற தனித்துவ இன அடையாளத்தையும் எதிர்காலத்தில் நாங்கள் இழந்து விடுவோமோ என்ற ஆதங்கத்தை, ஜே.வி.பியில் - தேசிய மக்கள் சக்தியில் - பெரும் எண்ணிக்கையில் - இணையத் தொடங்கியிருக்கும் எம்மவர்களின் செயற்பாடு ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

2009 இல் இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் 'தமிழ் தேசியம்' என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் செயற்பாடுகளின் தோல்வியும், அதை முன்னெடுத்த அரசியல்வாதிகளின் கேவலமான நடத்தைகளும், எங்கள் அரசியல் மீதும் அரசியல்வாதிகள் மீதும் எம்மவர்கள் நம்பிக்கை இழந்திருப்பதின் வெளிப்பாடே எம்மவர்களிற்கு ஏற்பட்டிருக்கும் ஜே.வி.பி. மீதான மோகம்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையான வெஸ்ட்மினிஸ்டர் முறையில், சிறுபான்மையினர் ஒரு குழுமமாக தனித்து இயங்குவதே சிறுபான்மையினரின் நலன்களை காக்கும் என்பது அரசியல் விஞ்ஞானம் அறிந்தவர்களிற்கு நன்றாகவே விளங்கும். சிறுபான்மையினர் ஓர் இனக்குழுமமாக அரசோடு இணைந்து பயணிக்கும் போதுதான் தனது இனம்சார் நன்மைகளை பெறமுடியும். அதைவிடுத்து, ஆட்சியில் இருக்கும் பெரும்பான்மையினத்தவர்கள் மட்டும் தலைமைப் பொறுப்புக்களில் இருக்கும் கட்சிகளில் சிறுபான்மையினர் இணைவது, சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமான அரசியல் அல்ல என்பதை அரசியல் விஞ்ஞானம் மட்டுமன்றி உலக வரலாறும் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

கடந்த காலங்களில் மலையகத் தமிழ் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் அரசில் ஒட்டி இணைந்து பயணித்தை விட ஒரு படி மேலான, அரசில் பங்காளியாக இணைய கிடைத்த மாட்சிமை மிக்க சந்தர்ப்பத்தை, சரியான அரசியல் காரணங்கள் எதுவுமின்றி, தமிழர் தரப்பு தவறவிட்டதன் பலனை, ஜே.வி.பி. இன்று நன்றாகவே அறுவடை செய்து கொண்டிருக்கிறது.

2024 ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், கடும் சிங்கள தேசியவாத கட்சியாக அடையாளப்படுத்தப்பட்ட ஜே.வி.பி. கட்சியின் வேட்பாளரான அநுர, யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியத்தின் தாய்வீடான தமிழரசுக் கட்சியின் வாசல் தேடி வந்து, ஜனாதிபதி தேர்தலில் தமக்கு ஆதரவளிக்குமாறு விடுத்த வேண்டுகோளை தமிழரசுக் கட்சி உதாசீனம் செய்தது. 1982 இலிருந்து, 1989 ஐயும் 2005 ஐயும் தவிர, ஜனாதிபதி தேர்தல்களில் தனித்தே போட்டியிட்ட ஜே.வி.பி. , வேறொரு கட்சியை நாடித் தேடி வந்து ஆதரவு கேட்ட முதலாவது முறையும் இதுவாகத் தானிருக்க வேண்டும்.

தெற்கில் மக்கள் ஒரு மாற்றத்திற்கு தயாராகி விட்டார்கள், இரு பாரம்பரிய கட்சிகளையும் புறமொதுக்கி விட்டு ஜே.வி.பியிற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க தென்னிலங்கை தயாராகி விட்டது என்பதை அறிந்திருந்தும், தமிழர்கள் ஜே.வி.பியிற்கு வாக்களிக்க இன்னும் தயாரில்லை என்ற காரணத்தாலோ என்னவோ ஜனாதிபதி தேர்தலில் சஜித்திற்கு ஆதரவளிக்க தமிழரசு முடிவு செய்தது.

மஹிந்தவின் ஆட்சியிலும் ரணிலின் ஆட்சியிலும் பங்கெடுத்த எந்த கட்சியினரோடும் தாம் ஆட்சியில் பங்காளிகளாக்க மாட்டோம் என்ற அறிவித்த ஜே.வி.பி., தமிழரசை மட்டும் அமைச்சரவையில் இணையுமாறு அழைத்ததாக தமிழரசே உறுதிப்படுத்தியது. ஒரு வேளை, ஜனாதிபதி தேர்தலில் தமிழரசு அநுரவை ஆதரித்திருந்தால், அடுத்து வந்த நாடாளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் ஜே.வி.பி. நேரடியாக

தொடர்ச்சி▼

# ஜே.வி.பி. எனும் பைட் பைபர்

**தொடர்ச்சி▲**

தேர்தலில் போட்டியிடாமல் போயும் போயிருக்கலாம்.

ரணிலிடம் அரசியல் லஞ்சமாக Bar permit பெற்றவர்களின் விவரங்களை பகிரங்கப்படுத்துவோம் என்ற வாக்குறுதியை ஜே.வி.பி. நிறைவேற்றாமல் போனதற்கும், தமிழரசு தங்களை ஆதரிக்காமல் போனதின் காரணகர்த்தாவான முக்கியஸ்தரை நாடாளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்ற ஜே.வி.பியின் நோக்கமே காரணமாக இருக்கக் கூடும் என்றும் நம்பப்படுகிறது.

தமிழசு ஜே.வி.பி. உடன் இணைந்து அரசமைக்க தவறவிட்ட சந்தர்ப்பம், தமிழரசின் ஆதரவளாளர்கள் சிலரை, ஜனாதிபதி தேர்தல் காலத்திலேயே ஜே.வி.பி. பக்கத் தள்ள வைத்து, அவர்களில் ஒருவரை ஜே.வி.பியின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பின ராகவும் ஆக்கியது.

இன்றைய தமிழ் இளைஞர்கள் தங்களை குறுகிய வட்டத்திற்குள் மட்டுப்படுத்தப்பட விரும்பாதவர்கள். புதிய யதார்த்தங்களாலும் புதிய முன்னுரிமைகளாலும் வடிவமைக்கப்பட்ட உலகப் பிரஜைகளாக அவர்கள் வலம் வர விரும்புகிறார்கள்.

இன்றைய தலைமுறை குறுகிய இன அடையாளங் களிற்குள் தங்களை சுருக்கிக் கொள்ளாமல் பொருளா தார வாய்ப்புகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கி றார்கள். எங்கள் ஊர், எங்கள் கிராமம், எங்கள் தாயகம் என்ற நிலப்பரப்பு எல்லைகளால் கட்டுப் படாமல், டிஜிட்டல் உலகின் மூலம் அவர்களின் எல்லைகள் அகிலத்தின் எல்லைகளிற்கு வியாபித்து நிற்கின்றன.

எங்கள் பிள்ளைகள் தங்களை இனரீதியான தேசியவாத சிந்தனைக்களால் தனிமைப்படுத்தலுக்கு ஆளாக்காது, பரந்து பட்ட இணக்கத்தையும் உள்ளடக் கத்தையும் தேர்ந்தெடுப்பதும், ஜே.வி.பி. இன்று பேசும் புதிய மொழி அவர்களை வசியப்படுத்துகிறது.

எமது பிள்ளைகள் தங்கள் பாரம்பரியத்தை நிராகரிப்பவர்கள் அல்லர்; அதற்கு மாறாக, அதனை மதிக்கிறார்கள். ஆனால் அந்த பாரம்பரியமே தங்களை முழுமையாக வரையறுக்க வேண்டும் என்பதை அவர்கள் ஏற்கவில்லை. இதன் மூலம் நாம் ஒரு கடினமான உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது; இன்றைய வடிவிலுள்ள தமிழ் தேசியம், இன்றைய எங்கள் தமிழ் தேசியவாதிகள் பேசும் தமிழ் தேசியம், எங்கள் பிள்ளைகளிற்கு விளங்கும் மொழியில் பேசப்படுவதில்லை.

ஒருகாலத்தில் ஆதிக்க சக்தியாக பேசப்பட்ட சிங்கள தேசியவாதம், 'அனுர அலையின்' பின்னணி யில், பல வகைகளில் தனது கடுந் தொனியை மென்மையாக்கியிருக்கிறது. இதனால் தமிழ் தேசியவாதம் தனது எதிர்சக்தியை (counter weight) இழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சிங்கள தேசியவாதத்தை எதிர்த்து எதிர்த்து எதிர்ப்பின்



வழியே வளர்ந்து வந்த தமிழ் தேசியவாதம் இன்றைய அமைதி பொழுதுகளில் தத்தளித்து தடுமாறுகிறது.

எதிர்ப்பின் அடிப்படையில் உருவான தமிழ் தேசிய இயக்கம், இப்போது சமரச வழிகளில் தன்னைத் தானே மீள்கட்டமைக்கும் வலிமையை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் பயணிக்கிறது. தமிழ் தேசியம் மாற்றத்திற்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளாவிட்டால், தோல்வியால் அல்ல, அலட்சியத் தால், முக்கியத்துவம் இழந்து மங்கிப் போகும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

சிறு வயதில் நாங்கள் படித்த The Pied Piper of Hamelin என்ற ஜெர்மனிய கதை பலருக்கு நினை வில் இருக்கும். Hamelin என்ற நகரில் எலிகள் பெருகிய போது, ஓர் இசைக் கலைஞன் தனது மந்திரக் குழலால் அவற்றை நகரத்திலிருந்து வெளியே கொண்டு செல்கிறான். ஆனால் அந்நகர மக்கள் அந்த இசைக் கலைஞனிற்கு வாக்குறுதி அளித்த பணத்தை வழங்கவில்லை. அதற்குப் பழிவாங்க, அந்த இசைக் கலைஞன் நகரத்தின் குழந்தைகளை தன்னோடு அழைத்துச் சென்று மறைந்து விடுகிறான்.


ஜே.வி.பி. பாசறையில் அணி அணியாக இணைந்து கொண்டிருக்கும் எம்மவர்களை பார்க்கும் போது, எங்களிற்கும், எங்கள் கண்கள் முன்னால், இந்த The Pied Piper of Hamelin கதை தான் அரங்கேறுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது. Hamelin கிராமத்தில் காணாமல்போன பிள்ளைகளின் கதிபோல, எங்கள் பிள்ளைகளிடம் இருந்தும் தமிழ் அடையாளம் காணாமல் போவதில் இருந்து தடுத்து, ஜே.வி.பி. எனும் Pied Piper இடமிருந்து காப்பாற்ற, நாங்கள் என்ன செய்ய போகிறோம்?

# திருமலை புத்தர் சிலை விவகாரப் பிக்கு விளக்கமறியலிலிருந்து ஆஸ்பத்திரிக்கு

திருகோணமலை சர்ச்சைக்குரிய புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலாங்கொடை கஸ்ஸப தேரர் திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

பலாங்கொடை கஸ்ஸப தேரர் உட்பட 10 பேர், திருகோணமலை டச்பே கடற் கரைக்கு அருகில் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் 17ஆம் திகதிகளில் சட்டவிரோதமாக புத்தர் சிலை வைத்து கட்டுமானங்களை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பலாங்கொடை கஸ்ஸப தேரர் சுகயீனம் காரணமாக பரிசோதனை ஒன்றுக்காக திருகோணமலை மாவட்ட பொது வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஏ.சி.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.





# திருமலை கால்நடை பண்ணையாளரின் பட்டிப்பொங்கல் நேற்று உப்புவெளியில்

(ஏ.எச்.ஹஸ்பர்)

கிழக்கு மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக் களத்தின் திருகோணமலை பட்டினமும் சூழலும் கால்நடை வைத்திய பிரிவுக்குட்பட்ட அரச கால் நடை வைத்தியர் நர்மதா குமுதன் மற்றும் பண்ணையாளர்களின் ஏற்பாட்டில் பட்டிப் பொங்கல் விழா  மிகவும் சிறப்பாக உப்பு வெளி கால்டை வைத்திய அலுவல வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் கிழக்க மாகாண பணிப்பாளர் வைத்தியர் சுல்பிகார் அபூபக்கர், பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் நௌசாத், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் மதிவண்ணன், உப்பு வெளி பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த ஆகியோர் சிறப்பு விருந்தினார்களாகக் கலந்து கொண்டனர்.

இது தவிர கால்நடை உற்பத்தி சுகாதர திணைக்களத்தின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், பண்ணையாளர்கள் பலரும் கலந்து கொண்டார்.

திருகோணமலையில் கால்நடை பண்ணையாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பட்டிப் பொங்கல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.















# அனுதாப நாடகங்கள் தாண்டி பதில் சொல்வாரா சிறீதரன்?



- புருஜோத்தமன் தங்கமயில் -

கணக்காளர் நாயகமாக இராணுவ அதிகாரியை நியமிப்பதற்கு ஆதரவாக அரசமைப்புப் பேரவைக்குள் வாக்களித்தமை தொடர்பில் சிவஞானம் சிறிதரன் விளக்கமளிப்பார் என்று தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு கடந்த ஒரு மாத காலமாக காத்திருக்கின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது மூத்தோர் வாக்கு. சிறிதரன் பொங்கலுக்குப் பிறகாவது தன்னுடைய நியாயப்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவார் என்று நினைத்தால், அவர் பொங்கிப் படைத்து உண்டு கழித்ததோடு சரி, விடயம் தொடர்பில் வாயே திறக்கிறார் இல்லை. மாவீரர் நாளுக்கு விளக்கேற்றி அஞ்சலித்துவிட்டு அடுத்த சில நாள்களிலேயே, இராணுவ கேணல் தர அதிகாரிக்காக ஆளுங்கட்சி உறுப்பினர்களோடு சேர்ந்து ஆதரவாக வாக்களித்தமை என்பது, தமிழ்த் தேசிய அரசியல் மீது நம்பிக்கை கொண்டோரின் நோக்கில் துரோகத்தனமானது. ஏனெனில், இராணுவ மயமாக்கல் என்பது தமிழ் மக்களை நாளும் பொழுதும் ஆக்கிரமித்து அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றது. சிவில் நடவடிக்கைகளில் இராணுவ தலையீடும், அத்துமீறலும் இன்னமும் தீர்க்க முடியாத பிரச்சினையாக தொடர்கின்றது. அப்படியான கட்டத்தில், இராணுவ அதிகாரியை சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் முக்கிய கூறாக, அதுவும் நாட்டின் காணக்காளர் நாயகமாக நியமிக்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு ஒத்தூதுவது என்பது அபத்தமானது. ஏற்றுக்கொள்ள முடியாதது. அதனை, சிறிதரன் ஏன் செய்தார் என்பதை அறியும் உரித்து தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால், அவரோ காலத்தை இழுத்தடித்து நாடகமாட முயல்கிறார்.

கடந்த வியாழக்கிழமை சிறிதரனுக்கு எதிராக தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்துக்குள் நீண்ட குற்றச்சாட்டுக்களை அடுக்கினார். பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகளின் சார்பில் அரசமைப்புப் பேரவைக்குள் அங்கம் வகிக்கும் சிறிதரன் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றமை என் பது, எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு எதிரானது. அதுவும், இராணுவ அதிகாரியை சிவில் நிர்வாக நடவடிக்கைகளின் கூறாக இணைப்பதற்கு ஆதரவாக வாக்களித்தமை தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம். அதுபோல, பூநகரி சூரிய மின்திட்டம் தொடர்பில் சிறிதரனும், அவர் சார்பானவர்களும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பவை, தயாசிறியின் குற்றச்சாட்டுக்கள். அடுத்த நாளே, அதாவது கடந்த வெள்ளிக்கிழமை தயாசிறிக்கு பதிலளித்து நாடாளுமன்றத்துக்குள் சிறிதரன் உரையாற்றினார். அதில், தன் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்தி, விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும் என்றார். அதுபோல, தனக்கு எதிராக கடந்த காலங்களில் இராணுவம் மேற்கொண்ட அத்துமீறல்கள் தொடர்பிலும் உருக்கமாகப் பேசினார். தற்போது தனக்கு எதிராக கேள்விகளை எழுப்பும் யாரும் தனக்கு ஆதரவாக அப்போது நின்றதில்லை என்றும் குறைபட்டார். இப்போது, தன்னை அரசியலில் இருந்து அகற்றுவதற்காக பல தரப்பினரும் இணைந்து ஓரணியில் செயற்படுகிறார்கள். ஆனால், தான் பனங்காட்டு நரி, சலசலப்புக்களுக்கு அஞ்சமாட்டேன் என்றார். ஆனால், இறுதி வரைக்கும் தன் மீதான பிரதான குற்றச்சாட்டான இராணுவ அதிகாரிக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் சிறிதரன் விளக்கமளிக்கவில்லை. அவர், தன்னைச் சுற்றி சதி வலை பின்னப்படுவதாக ஒரு வகையிலான அனுதாப ஆட்டத்தை தன்னைச் சுற்றி கட்டமைக்கிறார். அதன் மூலம், அவர் பிரதான குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பி ஓடலாம் என்று நம்புகிறார். ஏனெனில், கடந்த காலங்களில் அவ்வாறான அனுதாப நாடகங்களின் வழியாக இலகுவான வெற்றிகளைக் கண்டவர் அவர்.

அரசமைப்புப் பேரவைக்குள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றமை, குறிப்பாக இராணுவ அதிகாரியை கணக்காளர் நாயகமாக நியமிக்கும் தீர்மானங்களுக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் விளக்கம் கோரிய தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு, சிறிதரனை அந்தப் பதவியில் இருந்து விலகுமாறும் கோரியது. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியலின் முதன்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி இராணுவ மயமாக்கலுக்கு ஒருபோதும் ஒத்துழைக்காது என்பது, தன்னுடைய நிலைப்பாடு என்று அறிவித்திருக்கின்றது. அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான சிறிதரன் தொடர்ந்தும் இவ்வாறான வரம்பு மீறிய செயற்பாடுகளில் ஈடுபடுவது என்பது கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைக்க வல்லது. அரசமைப்புப் பேரவைக்குள் சிறிதரனின் செயற்பாடுகள் தொடர்பில் தமிழரசுக் கட்சி தன்னுடைய நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தி, கேள்விகளை எழுப்பிய பின்னரும் அவர் அமைதி பேணுகிறார். அவர், திட்டமிட்டு



தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டங்களைத் தவிர்க்கிறார்.

பொய்களிலும் புரட்டுக்களிலும் ஊறித் திளைத்த ஒருவராக சிறிதரன் மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றார். அனுதாப முகம் காட்டினால் மக்களை ஏமாற்றி வாக்கு அரசியலில் நிலைபெற்றுவிடலாம் என்று அவர் நம்புகிறார். அதனை அவர் தொடர்ச்சியாக வெற்றிகரமாக செயற்படுத்தியும் வந்திருக்கிறார். ஆனால், இப்போது அவர் ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஒரு கருவி மாதிரி அரசமைப்புப் பேரவைக்குள் செயற்படும் நிலை என்பது, சிறிதரன் மீதான அடுக்கடுக்கான சந்தேகங்களை மக்கள் மத்தியில் . "..கிளிநொச்சிக்கு ஒரு எம்.பி தேவை, அதற்காக சிறிதரனுக்கு

தொடர்ச்சி▼

# அனுதாப நாடகங்கள் தாண்டி பதில் சொல்வாரா சிறீதரன்?

**தொடர்ச்சி▲**

வாக்களிக்கிறோம்.." என்று கூறும் கணிசமான மக்கள் இருக்கிறார்கள். ஆனால், அந்த நிலைப்பாடுகளை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தன்னுடைய பதவிக்காக - வாக்கு அரசியல் நிலைத்திருப்புக்காக - யாரை வேண்டுமானாலும் பலிகொடுக்கலாம் என்ற நிலையில் சிறீதரன் நிற்கிறார். அவருக்காகக் கடந்த காலங்களில் ஆதரவாக நின்ற யாருக்காகவும் சிறீதரன் ஆதரவாக நின்றதில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வின் போது அவருக்காக பிரசாரம் செய்த கணிசமானவர்கள், கட்சியை விட்டுச் செல்லும் நிலை வந்தது. ஆனாலும் அவர்களுக்காக அவர் ஒருபோதும் நிற்கவில்லை. கடந்த பொதுத் தேர்தலில், தனக்கு ஆசனம் கிடைத்தால் போதும் என்ற ஒற்றை நிலைப்பாட்டில் மாத்திரமே அவர் நின்றார். அவருக்கு ஆதரவாக நின்றவர்கள் அரசியல் அனாதையாகிப் போனார்கள்.

கடந்த பொதுத் தேர்தலிலும் கிளிநொச்சியைச் சேர்ந்த ஜீவன் என்கிற முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், தான் சுயேச்சைக் குழுவாக களமிறங்கியது சிறீதரனின் ஏற்பாட்டில்தான் என்று கூறி தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தத் கடிதத்தின் உண்மைத் தன்மை தொடர்பில் ஆராய வேண்டியது அவசியமானது. ஆனால், அது தொடர்பிலும் சிறீதரன் வாயே திறக்கிறார் இல்லை. ஏனெனில், கிளிநொச்சி ஜீவன், கடந்த காலங்களில் சிறீதரனின் பிரதான ஆதரவாளாக இருந்தவர். அவருக்காக வேலைகளைச் செய்தவர். அவருக்காகவே, தமிழரசுக் கட்சியின் தலைமையோடு தொடர்ச்சியாக முரண்பட்டு வந்தவர். இதுவெல்லாம், கிளிநொச்சி மக்களுக்கும் தெரியும். ஆனாலும், இவற்றையெல்லாம் கடப்பதற்கு அனுதாப நாடகம் நடத்தினால் போதும் என்பது சிறீதரனின் எண்ணம். ஆனால், அது எல்லாத் தருணத்திலும் அவருக்கு கைகொடுக்காது. இப்போது, சிறீதரனுக்கு தமிழரசுக் கட்சியை விட்டால் வேறு எந்தத் தெரிவுகளும் இல்லை. ஏனெனில், அவரை யாரும் நம்பிச் செயற்படத் தயாராக இருக்க மாட்டார்கள். தொடர்ச்சியாக கட்சிக்கும், தமிழ்த் தேசிய அரசியலுக்கும் எதிராக செயற்பட்டுவிட்டு, தேர்தல் காலங்களில் தலைமையோடு ஒட்டி உறவாடி ஆசனத்தைப் பெற்றுவிடலாம் என்று சிறீதரன் நினைத்தால், அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. ஏனெனில், தமிழரசுக் கட்சிக்கும், அதன் தற்போதைய தலைமைக்கும் தெரியும் தங்களை விட்டால், சிறீதரனுக்கு இனி வேறு தெரிவுகள் இல்லை என்பது. அதனால், கிளிநொச்சி வாக்குகள் இழக்கப்பட்டுவிடும் என்கிற கதைகளை எடுத்துக் கொண்டு சிறீதரனால் நீண்ட தூரம் ஓட முடியாது. தற்போது, கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், சிறீதரனையும் இணைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்று நினைப்பதனால் தான், அவர் இன்னமும் கட்சிக்குள் இருக்கிறார். ஆனால், கட்சியினதும், தமிழ்த் தேசிய அரசியலினதும் நிலைப்பாடுகளுக்கு மாறாக சிறீதரன் தொடர்ந்தும் செயற்படுவாரானால், சிவஞானத்தினாலும் சிறீதரனைக் காப்பாற்ற முடியாது. இது தான் யதார்த்தம்.

இராணுவ கேணலுக்கு ஆதரவாக சிறீதரன் வாக்களித்தமை தொடர்பில் கேள்வி எழுப்பி, இந்தப் பத்தியாளர் ஏற்கனவே ஒரு பத்தியை ஒரு மாதத்திற்கு முன்னராக எழுதினார். அப்போதும், தார்மீக ரீதியாக சிறீதரன் விளக்கமளித்து விடயங்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கோரியிருந்தார். அப்படியான கோரிக்கைகள் தமிழ்த் தேசியப் பரப்பில் தொடர்ச்சியாக எழுந்திருந்தன. ஆனால், அவற்றையெல்லாம் தட்டிக்கழித்துவிட்டு, கடந்த வெள்ளிக்கிழமை அவர் நாடாளுமன்றத்துக்குள் அனுதாப நாடகம் போட்டமைதான், அவரை நோக்கி மீண்டும் இந்தப் பத்தியை எழுதத் தூண்டியது. தென் இலங்கையின் ஆக்கிரமிப்புக்கள், பிராந்திய வல்லரசுகளின் தலையீடுகள் தாண்டி தமிழ்த் தேசிய அரசியலைக் காப்பது என்பது குதிரைக்கொம்பாக இருக்கின்றது. மதம், சாதி, பிரதேசவாதம் உள்ளிட்ட விடயங்களை முன்னிறுத்தி தமிழ்த் தேசிய அரசியலை பிரித்தாளும் தந்திரங்கள் நாளும் பொழுதும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. அதிலும், நிறுவன ரீதியாக முன்னெடுக்கப்படுகின்றன. அப்படியான நிலையில், தமிழ்த் தேசியத்திற்காக அர்ப்பணித்த மக்கள், ஏமாற்றமடைந்து அமைதியாகிறார்கள். அப்படியான சூழலில், சிறீதரன் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக இராணுவ மயமாக்கலுக்காக ஒத்துழைக்கின்றமை, தமிழ் மக்களை இன்னும் இன்னும் ஏமாற்றமடையவே வைக்கும்.

அரசமைப்புப் பேரவைக்குள் தன்னை மீறி விடயங்கள் நிகழ்கின்றன. தனக்கு சிங்களமும், ஆங்கிலமும் தெரியாது. அதனால், அங்கு எடுக்கப்படும் முடிவுகள் குறித்து பல நேரங்களில் தெளிவு இருப்பதில்லை என்று கூறி சிறீதரன் விடயங்களை கடக்க முயலலாம். ஆனால், அரசமைப்புப் பேரவைக்குள் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பில், மொழிப்பிரச்சினையைக் காரணங்காட்டி சிறீதரன் ஒதுங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில், பல தடவைகள், அரசமைப்புப் பேரவைக்குள் இருந்த தமிழ் தெரிந்த உறுப்பினர்கள் சிறீதரனுக்கு விளக்கமளித்த பின்னரும், அவர் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார் என்பதுவும் குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டு எவ்வகையானது என்றால், "சிறீதரனுக்கு சிங்களமும், ஆங்கிலமும் பிரச்சினை. அதனால்தான் அவர் மாறி வாக்களித்துவிட்டார் என்று நினைத்து, அடுத்தடுத்த தருணங்களில் நாங்கள் தமிழில் அவருக்கு விளக்கினோம். ஆனால், அவர் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கண்ணசைவில் இயங்குகிறார். எங்களின் விளக்கத்தைக் கேட்பதில்லை..." என்ற குற்றச்சாட்டாகும். இந்தக் குற்றச்சாட்டின் உண்மைத்தன்னை தொடர்பிலும் சிறீதரன் வாய் திறக்கிறார் இல்லை. அவர், தனக்கு நெருக்கமானவர்களிடம் ஆங்கிலம் தெரியாமல் மாட்டிக் கொண்டு விட்டேன் என்று கூறி சமாளிக்க முயல்கிறார். ஆங்கிலம் தெரியாமல் ஒருமுறை தவறலாம். ஆனால், எட்டு முறை ஆளுங்கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தமை என்பது மொழிப்பிரச்சினையால் நிகழ்ந்தது அல்ல. அது, அரசாங்கத்திற்காக ஏதோவொரு கடப்பாட்டினை சிறீதரன் நிறைவேற்ற முயல்கின்றமையினால் நிகழ்வதாகும். அதன் உச்சமே, இராணுவ அதிகாரிக்கு ஆதரவாகவும் வாக்களித்தமையாகும்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது நீண்ட அர்ப்பணிப்புக்கள், தியாகங்களினால் நிலைத்திருப்பது. அதன் மீது கரும்புள்ளிகளை யார் குத்தினாலும், அவர்களை காலம் மன்னிக்காது. ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியல் என்பது வயிற்றுப் பிழைத்தலுக்கான அரசியல் அல்ல. உரிமைக்கும் உரித்துக்குமான போராட்டத்தின் கூறாக எழுந்தது. அதனை, அனுதாப நாடகங்கள் தாண்டி சிறீதரன் புரிந்து கொள்ள வேண்டும்.



# பாதிக்கப்பட்ட வர்த்தகங்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கல்

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தகங்களுக்காக தொடர்ந்தும் நிவாரணம் வழங்குவதற்காக நிதியமைச்சின் செயலாளரால் புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட சிறிய மற்றும் நுண் வர்த்தகங்களுக்காக ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் 2 லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகங்களில் வர்த்தகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட சிறிய மற்றும் நுண் வர்த்தகங்களுக்கும் இந்த கொடுப்பனவு உரித்தாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர கட்டடத்தில் இயங்கும் பதிவு செய்யப்படாத உள்ளக வணிகங்களுக்காக 50,000 ரூபா ஒருதடவை மாத்திரம் செலுத்தப்படும் கொடுப்பனவை வழங்கவும் நிதியமைச்சு வெளியிட்டுள்ள இந்த சுற்றறிக்கையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்படாத தயாரிப்பு கைத்தொழில்கள் மற்றும் பசுமை இல்லங்களுக்காகவும் 50,000 ரூபா கொடுப்பனவு செலுத்தப்படவுள்ளது.

இந்த சுற்றறிக்கை, பேரிடரால் பாதிக்கப்பட்ட நடைபாதை மற்றும் நடமாடும் உள்ளிட்ட தற்காலிக வர்த்தகத்திற்கும் 25,000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

# போதைப்பொருள்களைப் பயன்படுத்திய 480 சாரதிகள் கடந்த 22 நாள்களில் கைது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

கடந்த 22 நாள்களில் விஷ போதைப் பொருள்களைப் பயன்படுத்திய 480 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதிக்குள் 135 வாகன விபத்துகள் இடம்பெற்றுள்ளன எனவும் இதனால் 15 சாரதிகள் மற்றும் பாதசாரிகள் 50 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விஷ போதைப்பொருட்களைப் பயன்படுத்திய சாரதி தொழிலில் ஈடுபடும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த உள்ளதாகவும் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையெனவும் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

சட்டத்தை அனைவருக்கும் சமமெனக் கருதி செயற்படுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

சாரதிகளைப் பரிசோதனைக்குட்படுத்தவும் சுற்றிவளைப்புகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கவும் தேவையான வசதிகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

தமது பஸ் ஊழியர்கள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அனைத்து பஸ் உரிமையாளர்களுக்கும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.




இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரி பரிசோதனை முறைக்கு மேலதிகமாக உமிழ்நீர் மாதிரிகளை பரிசோதிக்கும் முன்னோடி திட்டமும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களுக்கு மேலதிகமாக, தேவைப்பட்டால் சட்டங்களைத் திருத்தவும் சோதனைகளுக்கு அதிகாரிகளுக்கு தொழில்நுட்ப உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

# சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து நாடளாவிய ரீதியில் 4,289 வழக்குகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

2026 ஜனவரி மாதம் அளவில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் இந்த மாதத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள வழக்குகள் தொடர்பில் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டு வரை சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியிலுள்ள மேல் நீதிமன்றங்களில் 4289 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளில் 1683 வழக்குகள் இந்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலி நீதவான் நீதிமன்றத்தில் இந்த விடயம் தொடர்பில் அதிகளவிலான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அதன் எண்ணிக்கை 442 ஆகும்.

இவற்றில் 101 வழக்குகள் இந்த மாதத்திற்குள் காலி மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

குருணாகல் மேல் நீதிமன்றத்தில் 423 வழக்குகளும் கண்டி மேல் நீதிமன்றத்தில் 414 வழக்குகளும் பதுளையில் 206 வழக்குகளும் களுத்துறையில் 229 வழக்குகளும் கேகாலையில் 206 வழக்குகளும் மாத்தறையில் 216 வழக்குகளும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



எவ்வாறாயினும், இந்த வழக்குகள் தொடர்பிலான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட தினம், விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் மற்றும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட தினம் தொடர்பான தகவல்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

# ‘கெசெல்வத்த தினூஷ’ நேற்று நாட்டுக்கு அழைத்துவரப்பட்டார்

சர்வதேச பொலிஸாரால் ‘சிவப்பு அறிவித்தல்’ பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த திட்டமிட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான ஹேவாபேடிகே தினூஷ சதுரங்க எனப்படும் “கெசெல்வத்த தினூஷ”, நேற்று மாலை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்தியாவின் சென்னையில் தங்கியிருந்த அவரைக் கைது செய்த குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் குழு, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று மாலை 4:15 அளவில் இண்டிகோ விமான சேவைக்குச் சொந்தமான 6E-1179 என்ற விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அவரை, அங்குள்ள குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பேற்றனர்.

அவரிடம் ஆரம்பக்கட்ட வாக்குமூலங்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து, மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு – வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்திடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு-12 பகுதியைச் சேர்ந்த 34 வயதான இவருக்கு எதிராகப் பல பாரதூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

வாழைத்தோட்டம், கொட்டாஞ்சேனை மற்றும் மட்டக்குளி ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற தொடர்ச்சியான மனிதப் படுகொலைகளுடன் இவருக்கு நேரடித் தொடர்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், சட்டவிரோதத் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளை வைத்திருந்தமை, கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் இடம்பெற்ற பல்வேறு பாரிய கொள்ளைச் சம்பவங்களில் பிரதான சூத்திரதாரியாக அவர் செயற்பட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.





# இணையக் குற்றங்கள் தொடர்பில் கடந்த ஆண்டில் 318 பேர் கைது

கடந்த 2025ஆம் ஆண்டில் பல்வேறு வகையான இணையக் குற்றங்களுடன் தொடர்புடைய 318 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவல்துறை ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வூட்லர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மட்டும் 2,000க்கும் அதிகமான இணையக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இது டிஜிட்டல் தளங்களில் அதிகரித்து வரும் அச்சுறுத்தலை வெளிப்படுத்துகிறது.

இணையக் குற்றவாளிகள் பிரதானமாக இளைஞர்களையும், முதியவர்களையும் இலக்கு வைக்கின்றனர்.

அத்துடன், அண்மைக் காலங்களில் புதிதாக இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கியவர்களும் இத்தகைய மோசடிகளுக்குப் பலியாகும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இணையத்தளங்களைப் பயன்படுத்தும்போது பொதுமக்கள் மிகவும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக, தங்களது கடவுச்சொற்கள் அல்லது தனிப்பட்ட தகவல்களைத் தெரியாத நபர்களுக்கோ அல்லது அங்கீகரிக்கப்படாத தரப்பினருக்கோ பகிர வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இணையக் குற்றங்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டறிவதற்கும் பொலிஸ் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மேலதிக விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

# வெனிசுலா வெளியுறவு அமைச்சருடன் விஜித ஹேரத் தொலைபேசி உரையாடல்

இலங்கையின் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், வெனிசுலா வெளிவிவகார அமைச்சர் ஐவன் கில் பிண்டோவுடன் தொலைபேசி வாயிலாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.




இந்தக் கலந்துரையாடல் குறித்து அமைச்சர்விஜிதஹேரத்தமதுஎக்ஸ்சமூக வலைதளப் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இருப்பினும், இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையே பரிமாறப்பட்ட கருத்துக்கள் அல்லது விவாதிக்கப்பட்ட விடயங்கள் குறித்த மேலதிக விபரங்கள் அந்தப் பதிவில் குறிப்பிடப்படவில்லை.

வெனிசுலாவில் அண்மைக் காலமாக நிலவி வரும் அரசியல் மாற்றங்கள் மற்றும் பாதுகாப்புச் சூழல்கள் சர்வதேச ரீதியில் பெரும் அவதானத்தைப் பெற்றுள்ளன.

இத்தகையதொரு பின்னணியில் இரு நாட்டு அமைச்சர்களுக்கும் இடையிலான இந்தத் தொடர்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

வெனிசுலாவின் தற்போதைய நிலைமையை இலங்கை அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாக வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக கடந்த ஜனவரி 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில், சர்வதேசசட்டக்கொள்கைகளைஇலங்கை பின்பற்றுவதை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியிருந்தது.

குறிப்பாக, நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதித்தல், பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமை, சர்வதேச சிக்கல்களை அமைதியான முறையில் தீர்த்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கு மதிப்பளித்தல் ஆகிய கொள்கைகளில் இலங்கை உறுதியாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# வெசாக் பண்டிகையை மே 30 இல் கொண்டாடுவதற்கு அரசு தீர்மானம்



2026 ஆம் ஆண்டுக்கான அரச வெசாக் பண்டிகையை மே மாதம் 30 ஆம் திகதி நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சர்தன அபேரத்ன நேற்று இந்த தகவலை வெளியிட்டார்.

நான்கு பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டு பௌர்ணமி தினங்கள் வருவதால், வெசாக் பண்டிகைக்கான திகதியை மறுபரிசீலனை செய்யுமாறு அவர்கள் ஜனாதிபதியிடம் கோரியிருந்தனர்.

முன்னதாக பூரணை தொடர்பான குழு மே 1ஆம் திகதியை வெசாக் பௌர்ணமி தினமாகத் தீர்மானித்திருந்தது. எனினும், மீண்டும் கூடிய அந்த குழு, அரச வெசாக் பண்டிகையை மே 30 ஆம் திகதி நடத்த முடிவு செய்துள்ளது.

மே மாதம் 1ஆம் திகதி பௌர்ணமி தினத்தில் மக்கள் எப்போதும் போல தங்களது மத வழிபாடுகளில் ஈடுபட முடியும்.

இருப்பினும், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அரச வெசாக் பண்டிகை மே 30 ஆம் திகதியே நடைபெறும் என அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

# கழிவுநீரை பொது வாய்க்காலில் வெளியேற்றியவருக்கு தண்டம்



வீட்டு கழிவு நீரை மழை நீர் வடிந்தோடும் பொது வாயுக்கலில் வெளியேற்றிய ஒருவருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் 5000 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட வல்வெட்டித்துறை தென் கிழக்கு பிரதேசத்தில் வசிக்கும் ஒருவருக்கே இவ்வாறு தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து வெளியேறும் கழிவு நீரினை மழைநீர் வடிந்தோடுவதற்காக கட்டப்பட்ட பொது வாய்க்காலினுள் விடப்படுவதாகவும், அதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமகன் ஒருவரால் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத்திற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டிற்கு அமைவாக மேற்படி நபருக்கு எதிராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர் ப. தினேஸினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் பருத்தித்துறை நீதிமன்றினால் 5000 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நாங்களே தமிழகத்தில் மீண்டும் வெல்லுவோம்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி



"முதல்வராகப் பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு நாளும் மக்களுக்காகவே வாழ்கிறேன். தமிழகத்தில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமையும்."

– இவ்வாறு சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"2021 இல் தி.மு.க. 6 ஆவது முறையாக ஆட்சிக்கு வந்தபோது மகிழ்ச்சியாக இருந்தது. அதேநேரத்தில் கவலையாகவும் இருந்தது. அ.தி.மு.க. விட்டுச் சென்ற மோசமான நிதிநிலை மற்றும் மத்திய அரசின் ஒத்துழைப்பின்மை ஆகிய 2 நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆட்சிப் பொறுப்பேற்றது கவலை அளித்தது.

நான் முதல்வராகப் பொறுப்பேற்று 1,724 நாள்கள் ஆகியுள்ளன. மொத்தம் 8,685 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். 15,117 கோப்புகளில் கையெழுத்திட்டுள்ளேன். சென்னையைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களுக்கு 173 முறை பயணம் மேற்கொண்டுள்ளேன். மாவட்ட அளவில் நடந்த 71 அரசு நலத்திட்ட விழாக்களில் பங்கேற்று, 44.44 லட்சம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன். கடந்த 5 ஆண்டுகளில் ஒவ்வொரு நாளும் மக்களுக்காகவே வாழ்ந்துள்ளேன். இந்த உண்மையை எதிர்க்கட்சிகளால் தாங்க முடியவில்லை.

தமிழக நலனுக்காக செயல்பட வேண்டிய ஆளுநர், பேரவைமரபுகளை மீறி, உரையை வாசிக்காமல் வெளியேறியது மக்களாட்சிக்கு விடப்பட்ட சவால். எங்களுக்கு யாரும் தேசபக்தி குறித்து பாடம் எடுக்க வேண்டியதில்லை. அரசியல் சாசனத்தைப் பழிப்பவர்கள்தான் தேச விரோதிகள். மத்திய அரசு புள்ளிவிவரங்களின்படி, தமிழகம் 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது.

இந்தியாவின் வறுமை விகிதம் 11.2 சதவீதமாகும். தமிழகத்தில் அது வெறும் 1.43 சதவீதம் மட்டுமே. இதை மத்திய அரசின் புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது. எனவே, இதுகுறித்து ஆளுநர் கேள்வி கேட்க வேண்டுமென்றால், அவரை இங்கே அனுப்பி வைத்த மத்திய அரசைத்தான் கேட்க வேண்டும்.

மத்திய அரசிடமிருந்து கடந்த 5 ஆண்டுகளில் 65 இற்கும் மேற்பட்ட விருதுகளை வென்றுள்ளோம். கடந்த 5 ஆண்டுகால உழைப்பைப் பார்த்து மக்கள் மீண்டும் தி.மு.க. ஆட்சியை கொண்டுவரத் தீர்மானித்துவிட்டார்கள். எங்களின் சாதனைகளை நாங்களே மிஞ்சும் வகையில் 'திராவிட மொடல் 2.0' அமையும். நாங்களே மீண்டும் வெல்வோம்." என்று தெரிவித்துள்ளார்.

# தமிழ் மகளின் துயரங்களுக்கு காங்கிரஸ் கட்சி தான் காரணம்

## சீமான் தெரிவிப்பு



"தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்."

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த சீமான்,

"தமிழகத்தில்ஆட்சிமுறைமாறவேண்டும். தாலிக்கு தங்கம் கொடுப்பார்கள். பின்னர் மதுவை குடிக்கவைத்து அவர்களே தாலியை அறுப்பார்கள். ரேஷனில் இலவசமாக அரிசி போடுகிறார்கள். அதை எத்தனை அமைச்சர்கள், எம்.பிக்கள், எம்.எல்.ஏக்கள் வாங்கி சாப்பிடுகிறார்கள். மக்கள் விநியோகத்துக்கு வரும்போது தரம் குறைவாக இருக்கிறது.

தமிழகத்தின் தலைநகரில் இன்னும் தண்ணீர் தேங்கி கொண்டுதான் இருக்கிறது. மக்களை வெள்ளத்தில் மிதக்க விட்டு விட்டு வெள்ள நிவாரணம் கொடுத்ததெல்லாம் ஆட்சி இல்லை. எவ்வளவு வெள்ளம் வந்தாலும், அதை வழிந்தோட செய்வதுதான் ஆட்சி.

எனக்கும், என் கொள்கைக்கும் யாரும் போட்டியில்லை, ஒருவர் இருமொழி கொள்கைஎன்பார், ஒருவருக்குகொள்கை என்றால் என்னவென்றே தெரியாது. கூட்டணி அமைப்பவர்களுக்கு கொள்கை இல்லை, சீட்டுகள் மட்டுமே இலக்கு.

தி.மு.கவுக்கு மாற்று அ.தி.மு.க. என எப்படிச் சொல்ல முடியும். தமிழகத்தில் கடன் வளர்ச்சி தான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. கூட்டணி வைத்து கூடி கொள்ளையடித்தால் எல்லாம் சரியாகிவிடுமா? தேர்தல் வந்த பிறகு பேரம் பேசுவது கேவலம்.

அரசியல் இங்கே வியாபாரம் ஆக்கப்படுகிறது. யார் அதிக காசு மற்றும் சீட்டுகள் கொடுக்கிறார்களோ அவர்களிடம் சென்று விடுகிறார்கள். அடர்த்தியான வறுமை, அறியாமை எனும் குழந்தையைப் பெறுகிறது. வறுமையும் அறியாமையும் சேரும்போது மறதி வருகிறது. இவை மூன்றும் இப்போதிருக்கும் அரசியல்வாதிகளுக்கு முதலீடாக மாறிவிடுகிறது.

வெற்றியையும்தோல்வியையும்சமமாகக் கருதுபவன்தான் வீரன். வெற்றியடைந்தால் இருப்பேன்.. தோல்வியடைந்தால்சென்றுவிடுவேன்என்பவன்கோழை. எங்களுக்கு தெரியாத மூன்றெழுத்து பயம். எங்கள் பரம்பரைக்கே தெரிந்த மூன்றெழுத்து வீரம். தி.மு.கவை ஒழிக்க வேண்டும் எனக் கூறுகிறார்களே தவிர, மக்களுக்கான அரசியலை கொண்டு வர வேண்டும் என நினைக்கவில்லை. மதவாத கட்சியை முதலில் கதவை திறந்து கொண்டு வந்தது யார்?

சீமானுக்கு வாக்களித்தால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்து விடும் எனக் கூறுகிறார்கள். இவர்களுக்கு அடிப்படை அறிவு கூட கிடையாது. தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிடும் என சொல்வதற்கு ஒரு ஆட்சியா? ஒரு தலைவரா?. தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வராது என்று தைரியமாக சொல்ல வேண்டும். தமிழ் மக்கள் இந்த மண்ணில் படும் அனைத்து துயரங்களுக்கும் காரணம் காங்கிரஸ்தான். முதலில் இந்தியை திணித்து எனது தாய் மொழியாம் தமிழை அழிக்க நினைத்தது காங்கிரஸ்." என்று தெரிவித்துள்ளார்.




# காஷ்மீரில் தீவிரவாதி சுட்டுக் கொலை

ஜம்மு காஷ்மீரில் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதியை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இது குறித்து ஜம்மு பொலிஸ் ஐ.ஜி பீம் சென் துதி கூறும்போது,

"கதுவா மாவட்டத்தில் உள்ள பிலாவர் பகுதியில் ஜம்மு காஷ்மீர் பொலிஸார், மத்திய ரிசர்வ் பொலிஸார், இராணுவத்தினர் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல லப்பட்டார்.

அவர் ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் கொமாண்டர் உஸ்மான் என தெரியவந்தது. அவரிடமிருந்து எம்4 தானியங்கி துப்பாக்கி உட்பட ஏராளமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன." என்று தெரிவித்தார்.

## 'நமது நாடே முதல் முன்னுரிமை':

# பாதுகாப்பு கொள்கையை வெளியிட்டது பென்டகன்!

அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையான பென்டகன் வெளியிட்டுள்ள புதிய "தேசிய பாதுகாப்பு மூலோபாயம்", அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் துறை வெளியிட்டுள்ள 34 பக்க அறிக்கையில், இனி அமெரிக்காவின் தாயகப் பாதுகாப்பு மற்றும் மேற்கு அரைக்கோளத்தின் பாதுகாப்புக்கே முதலிடம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சீனா மிக முக்கியமான பாதுகாப்பு அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது.

ஆனால்,புதியகொள்கையின்படிசீனாவுடனான உறவு "மோதலுக்குப் பதிலாக வலிமையுடன்" அணுகப்படும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நேட்டோ போன்ற கூட்டணி நாடுகள் தங்களின் பாதுகாப்புச் செலவினங்களை தாங்களே ஏற்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துகிறது.

"மற்ற நாடுகளின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா இனி மானியம் வழங்க முடியாது" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

"வெற்று இலட்சியவாதத்தை விடுத்து, கடினமான யதார்த்தத்தை நோக்கிப் பயணிப்போம்" என்று பென்டகன் தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் பிரச்சனைகள் அனைத்தும் அமெரிக்காவின் பிரச்சினைகள் அல்ல என்பது இதில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

யுக்ரைன் மீதான படையெடுப்பு தொடங்கி நான்கு ஆண்டுகளாகும் நிலையில், ரஷ்யாவை ஒரு "கையாலக் கூடிய அச்சுறுத்தல்" என்றே அமெரிக்கா கருதுகிறது.



ஐரோப்பிய நாடுகளே இதற்குத் தலைமை தாங்கிப் பதிலடி கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது.

முன்னெப்போதும் இல்லாத வகையில், இந்த அறிக்கையில் "தாய்வான்" பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.

எனினும், சீனா எங்களை ஆதிக்கம் செலுத்துவதைத் தடுப்போம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

வடகொரியாவை எதிர்கொள்ளும் முழுப் பொறுப்பையும் தென் கொரியாவே ஏற்க முடியும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கம், அமெரிக்காவிற்கு நேரடியாகப் பலன் தரும் பகுதிகள் மீது மட்டும் கவனம் செலுத்துகிறது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பனாமா கால்வாய், அமெரிக்க வளைகுடா, கிரீன்லாந்து போன்ற இடங்களுக்கான இராணுவ மற்றும் வணிக ரீதியான அணுகலை உறுதி செய்வதே அமெரிக்காவின் இலக்காகும்.

அமெரிக்காவின் இந்த முடிவை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரான் விமர்சித்துள்ளார்.

"விதிகள் இல்லாத உலகத்தை நோக்கி நாம் நகர்கிறோம்" என்று அவர் எச்சரித்துள்ளார்.

கனடா பிரதமர் மார்க் கார்னி கூறுகையில், "பழைய உலக ஒழுங்கு இனி திரும்பப் போவதில்லை கனடா, ஆஸ்திரேலியா போன்ற நடுத்தர நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம்" என்று வலியுறுத்தியுள்ளார்.



# அமெரிக்காவை தாக்கும் கடும் பனிப்புயல்: 84,000 குடும்பங்கள் மின்சாரமின்றி தவிப்பு

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களை சூறையாடி வரும் கடும் பனிப்புயல் காரணமாக, நாடு முழுவதும் 84,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரத் தடையால் பாதிக்கப்பட்டுள்ளன.

மின்சார விநியோகத்தைக் கண்காணிக்கும் ‘PowerOutage.com’ இணையதளத்தின் தரவுகளின்படி, பல மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, டெக்சாஸ் மாநிலம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் 43,000 இற்கும் அதிகமான பாவனையாளர்கள் மின்சாரமின்றி இருளில் மூழ்கியுள்ளனர்.

லூசியானாவில் 6,000 குடும்பங்களும், ஆர்கன்சாஸ்சில் 5,000 குடும்பங்களும் கலிபோர்னியாவில் சுமார் 4,000 குடும்பங்களும் மின்சார விநியோகமின்றித் தவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பதிவாகியுள்ள அனைத்து மின்வெட்டுகளுக்கும் இந்தப் பனிப்புயல் தான் நேரடிக் காரணமா என்பது இன்னும் முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை.

இருப்பினும், புயலினால் மின் விநியோகக் கட்டமைப்பிற்கு கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும் என்று வானிலை ஆய்வாளர்களும் அதிகாரிகளும் ஏற்கனவே எச்சரித்திருந்தனர்.

சீரற்ற வானிலை காரணமாகப் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் மின்சாரத்தை மீண்டும் சீரமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்கவும்,பொதுமக்களின்பாதுகாப்பைஉறுதிப்படுத்தவும் அந்தந்த மாநில காவல்துறையினர் மற்றும் அவசரக்காலப் பிரிவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.







# இன்றைய ராசி பலன்கள்- 25.01.2026




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்தி றன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுப விக்கலாம்.பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையு டன் இவைகளை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற் றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது.




இன்று கடினமான சூழ்நிலை களை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதற்றத்துக்கு ஆளா வீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்கு களில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள்- 25.01.2026





இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக கானபட்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல் பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பரா மரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப் படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்ட மிடுதல் மற்றும் யுக்திகளை கையாள் வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பத ற ற த்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக் கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச் சினைகள் ஏதும் இருக்காது.என்றாலும் அதிக வேலை காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரி களின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# காத்தான்குடி, ஏறாவூர்ப் பகுதிகளில் இரண்டு ஐஸ் வியாபாரிகள் கைது!

**(கனகராசா சரவணன்)**

ஏறாவூர் ,காத்தான்குடி பிரதேசங்களில் போதைப்பொருள் வியாபாரிகளான தையல்காரர் ஒருவர் உட்பட இருவரை 120 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி.கே. திலகரத் தின தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கிழக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரும் சட்டத்தரணியுமான வர்ண ஜயசுந்தரவின் ஆலோசனையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலா ரத்னாவின் வழிகாட்டலில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே. திலகரத்தின மற்றும் பதில் பொறுப் பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமீர தலைமையில் இரண்டு பொலிஸ் குழுக்களாக பிரிந்து செயற்பட்டனர்.

இரு குழுக்களும் நேற்று முன்தினம் இரவு ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு குழுவும் காத்தான்குடி



பகுதியில் ஒரு குழுவுமாக ஒரே நேரத்தில் வீதியில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் காத்தான்குடி எவ். சி. வீதியில் வியாபாரத்துக்காகப் போதை பொருளை எடுத்துக் கொண்டு சென்ற 26 வயதுடைய வியாபாரியை சுற்றி வளைத்து 10 கிராம் ஔஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

அதேவேளை ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வீதியில் வைத்து அந்தப் பகுதியில் ஆடைகள் தைக்கும் கடையை நடத்தி வந்த உரிமையாளரான வியாபாரியை 110 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இரு வியாபாரிக ளையும் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையைத் தாம் முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி.கே. திலகரத் தின தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.